2023 - 24 ஆம் ஆண்டில் ரூ.13,000 கோடி வேளாண் பொருட்கள் ஏற்றுமதி

# விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை!

## வேளாண் ஏற்றுமதிக் கருத்தரங்கில் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

கடலூர், அக்.25-

கடலூர் மாவட்டம் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாநில அளவிலான வேளாண் ஏற்றுமதி கருத்தரங்கினை துவக்கி வைத்தார்.

வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஜி.பிரகாஷ் ஆகியோர் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (23.10.2024) கடலூர் மாவட்டம், வடலூர் தனியார் திருமண மண்டபத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்மை விளை பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு கருத்தரங்கினை துவக்கி வைத்தார்.

இக்கருத்தரங்கில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் விவசாயிகள் தங்களது விளைப்பொருட்களை விற்பனை செய்வதற்கு அனைத்து வசதிகளையும் அரசின் மூலம் செய்துதர வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்கம் அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் ஏற்றுமதி ஊக்குவிப்பு தொடர்பான மாநில அளவிலான வேளாண் ஏற்றுமதி கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

இதன் மூலம் விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் முதலாளியாக மாறும் திட்டத்திற்கு வலு



வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் மாவட்டம், வடலூரில் வேளாண் விளை பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு கருத்தரங்கினை நேற்று முன்தினம் (23.10.2024) துவக்கி வைத்தார். உடன் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஜி.பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், வேளாண்மை துணை இயக்குனர் திருமதி பூங்கோதை உட்பட பலர் உள்ளனர்.

சேர்க்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பருவ காலத்தில் விளைச்சல் அதிகமாகும் போது ஏற்படும் விலை வீழ்ச்சியினை கட்டுப்படுத்திட அவற்றினை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக பல்வேறு வகையிலான பொருட்களாக தயார்செய்து விற்பனை செய்ய இக்கருத்தரங்கம் வாயிலாக விளக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண் ஏற்றுமதியில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கின்றது. வேளாண் பொருட்களின் ஏற்றுமதியில் இந்தியா 10வது இடம் வகிக்கின்றது. இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 6.5 சதவீதமாகும், தமிழ்நாட்டிலிருந்து 2022 23 ஆம் ஆண்டில் 24.5 இலட்சம் டன் பொருட்கள் ரூ.12 ஆயிரம் கோடி மதிப்பிலும் மற்றும் 2023 - 24 ஆம் ஆண்டில் 25.15 இலட்சம் மெட்ரிக் டன் பொருட்கள் ரூ.13 ஆயிரம் கோடி மதிப்பிலும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

### முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்!

ஏற்றுமதி சார்ந்த வர்த்தகத்தில் தமிழ்நாட்டைப் பொருத்தமட்டில் அரிசி, நிலக்கடலை, பதப்படுத்தப்பட்டபழங்கள், முந்திரி, மக்காச்சோளம், பதப்படுத்தப்பட்ட உணவுகள், வெள்ளரி மற்றும் மாம்பழச்சாறு ஆகியவை முக்கியமான ஏற்றுமதி பொருட்களாகும்.

மேலும், வெங்காயம், நாட்டு சர்க்கரை, மாவுவகைகள், காய்கறிகள், மலர்கள், பதப்படுத்தப்பட்ட காய்கறிகள் மற்றும் பால்சார்ந்த பொருட்களும் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டிலிருந்து வங்காளதேசம், ஐக்கிய அரேபிய நாடுகள், அமெரிக்கா துணைக்கண்டம், சீனா, ஸ்ரீலங்கா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வேளாண் ஏற்றுமதியில் சிறப்பாக செயல்படும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் ரூ.2.00 லட்சம் பரிசுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான உலகளாவிய சந்தை வாய்ப்புகள், அவற்றின் தர நிலைகள் மற்றும் ஏற்றுமதி நடைமுறைகள் பற்றிய தகவல்களை விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பெறும் வகையில் வேளாண் ஏற்றுமதி சேவை மையம் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் சென்னையில் நிறுவப்பட்டுள்ளது.

### புவிசார் குறியீடு!

புவிசார் குறியீடு பெறப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதால் அதன் தேவை மற்றும் ஏற்றுமதி அளவை அதிகரிக்கலாம். இதனை கருத்தில் கொண்டு மாநிலத்தின் தனித்துவமான 35 வேளாண் பொருட்களுக்கு புவிசார்குறியீடு பெறும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. சோழவந்தான் வெற்றிலைக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. இதர வேளாண் விளை பொருட்களுக்கு விரைவில் புவிசார் குறியீடு பெறப்பட உள்ளது.

வேளாண் விளை பொருட்களை சுத்தப்படுத்தி வகைப்படுத்துவதன் மூலம் சந்தை வாய்ப்பினை அதிகரித்து விவசாயிகளுக்கு அதிக இலாபம் ஈட்டித்தரும் நோக்குடன் 64 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் 20 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உணவு பதப்படுத்தும் தொழில் முனைவோர்களை உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க ஊக்குவிக்கும் பொருட்டு திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் 50 ஏக்கர் பரப்பளவில் பெரிய அளவிலான உணவுப் பூங்காவும் மற்றும் தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், கடலூர் மற்றும் மதுரை ஆகிய 7 மாவட்டங்களில் 10 ஏக்கர் பரப்பளவில் சிறிய அளவிலான உணவுப் பூங்காக்களும் அமைக்கப்பட்டு, உணவு பதப்படுத்தும் தொழில் முனைவோர்களுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

பல்வேறு திட்டங்களின் மூலம் உற்பத்தியை அதிகரிக்க அரசு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டாலும், இந்தத் திட்டங்களை செயல்படுத்துதல், உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்களை சந்தைப்படுத்துவதன் மூலம் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் வருமானத்தை அதிகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கருத்தரங்கில், பயின்ற வழிமுறைகளை கொண்டு அனைத்து மாவட்டங்களிலுள்ள விவசாயிகள், அந்தந்த பகுதிகளில் விளையும் பொருட்களை மதிப்புக்கூட்டி ஏற்றுமதி செய்ய புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி அவர்களின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஏற்றுமதியினை ஊக்குவிக்க 2024 - 25 ஆம் ஆண்டிற்கு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் சுவை மற்றும் மணமூட்டும் பொருட்களுக்கான ஏற்றுமதி குறித்த பயிற்சி மற்றும் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் இணைப்புக் கூட்டங்கள் நடத்த அறிவிப்பு வெளியிடப்பட்டு, ஈரோடு மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், 20242025 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஏற்றுமதி தொடர்பான சான்றிதழ்களை பெறும் பொருட்டு ஒரு விவசாயி/ உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு அதிகபட்சமாக ரூ.15,000/ வீதம் 100 நபர்களுக்கு ரூ.15 இலட்சம் வழங்குவதற்கான அறிவிப்பு அறிவிக்கப்பட்டு திட்ட செயலாக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகள் இக்கருத்தரங்கினை நல்ல முறையில் பயன்படுத்தி உற்பத்திப் பொருட்களை பன்னாட்டு அளவில் சந்தைப்படுத்தி அதிக வருவாய் பெற்று பயனடைய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் நீண்டகாலமாக வேளாண் துறையில் ஈடுபட்டு சிறந்த முறையில் அதிக மகசூல்களை விற்பனை செய்து கொண்டிருக்கும் முன்னோடி விவசாயிகள் பிற விவசாயிகளுக்கு தங்களது கருத்துகளை தெரிவித்தனர்.

இக்கருத்தரங்கில் மாநில அட்மா குழுத்தலைவர் வி.சிவக்குமார், வேளாண்துறை இணை இயக்குநர் கென்னடி ஜெபக்குமார், வேளாண்மை துணை இயக்குனர் திருமதி பூங்கோதை, வடலூர் நகர மன்ற தலைவர் சிவக்குமார், நபார்டு உதவி பொது மேலாளர் சித்தார்த், ஏற்றுமதி கடன் உத்தரவு கார்ப்ரேஷன் கிளை மேலாளர் திருமதி சாந்தினி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

# வறுமையை அளவிடும் தவறான முறைகள் : உலக வங்கியின் அளவீடுகளில் உள்ள குறைபாடுகள்

பொருளாதார அறிஞர் பேரா.பிரபாத் பட்நாயக்

**வ**றுமையை அளவிடுவதில் உலக வங்கி மற்றும் ஐ.நா. வளர்ச்சித் திட்டம் (UNDP) போன்ற சர்வதேச நிறுவனங்களின் அணுகுமுறையில் பல குறைபாடுகள் உள்ளன.

### முக்கிய விமர்சனங்கள்

**சொத்து நிலை கணக்கிடப்படவில்லை**

- தற்போதைய அளவீடுகள் மக்களின் வருமானத்தை மட்டுமே கணக்கில் எடுக்கின்றன.
- சொத்துக்களின் இழப்பு கணக்கில் எடுக்கப்படவில்லை.
- நவீன தாராளமய முதலாளித்துவத்தின் கீழ் ஏற்படும் சொத்து இழப்புகள் புறக்கணிக்கப்படுகின்றன.

**செலவினத்தை வருமானமாக கருதும் தவறு**

- வருமான தரவுகள் கிடைக்காத நிலையில் செலவினத்தை அடிப்படையாகக் கொள்கின்றனர்.
- கடன் வாங்கியோ, சொத்துக்களை விற்றோ செய்யப்படும் செலவுகளும் வருமானமாக கணக்கிடப்படுகிறது.
- இது உண்மையான வறுமை நிலையை மறைக்கிறது.

**விலைக் குறியீட்டின் குறைபாடுகள்**

- பொது சுகாதாரம், கல்வி போன்ற சேவைகளின் தனியார்மயமாக்கலால் ஏற்படும் செலவு உயர்வு கணக்கிடப்படவில்லை.
- அடிப்படை பொருட்கள் கிடைக்காமை காரணமாக மாற்றுப் பொருட்களுக்கு செல்லும் செலவு கணக்கிடப்படவில்லை.
- இதனால் உண்மையான வாழ்க்கைச் செலவு உயர்வு, குறைத்து மதிப்பிடப்படுகிறது.

### இந்தியாவின் நிலை

**கடன் சுமை அதிகரிப்பு**

- 2012-2018 காலகட்டத்தில் கடன் வாங்கிய கிராமப்புற குடும்பங்கள் 11% அதிகரிப்பு.
- கடன் தொகை 43% அதிகரிப்பு.
- விவசாயிகளின் சராசரி சொத்து மதிப்பு 33% வீழ்ச்சி.

**ஊட்டச்சத்து குறைபாடு**

- தினசரி 2200 கலோரி பெறாத கிராமப்புற மக்கள் விகிதம் 58%லிருந்து 68% ஆக உயர்வு (1993-94 முதல் 2011-12 வரை).
- நகர்ப்புறத்தில் 2100 கலோரி பெறாதவர்கள் 57%லிருந்து 65% ஆக உயர்வு.
- 2017-18 முதல் நிலைமை மேலும் மோசமாகி உள்ளது.

**உலக வங்கியின் தவறான கணிப்பு**

- 2011-12ல் 12% என்றிருந்த “தீவிர வறுமை’2022-23ல் 2% ஆக குறைந்ததாக காட்டுகிறது.
- நாள் ஒன்றுக்கு 1.90 டாலர் (சுமார் ரூ.53) வருமானம் இருந்தால் வறுமை இல்லை. என்ற குறைந்த அளவுகோல்.
- உண்மை நிலையை பிரதிபலிக்காத அளவீடுகள்.

### வெற்று பொய்ப்பிரச்சாரம்

“கோடிக்கணக்கானோர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டனர்” என்ற பா.ஜ.க. கூட்டணி அரசின் கூற்று வெறும் பொய்ப்பிரச்சாரமே. ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) நிறைவேற்றியதாக காட்ட நாடுகள் போட்டியிடும் நிலையில், இது போன்ற தவறான கணக்கீடுகள் மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

◆ பீப்பிள்ஸ் டெமாக்ரசி (அக்.20) இதழில் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரையில் இருந்து

நன்றி : **தீக்கதிர்**
**24.10.2024**

---

நீதிமன்ற ஆணைகளை மறைத்து தவறான தகவலைப் பரப்பிய

# அறப்போர் இயக்கம் மீது மான நஷ்ட வழக்கு!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் சார்பில் நோட்டீஸ்!

*சென்னை, அக்.25-*

*“நீதிமன்ற ஆணைகளை மறைத்து தவறான தகவலைப் பரப்பிய அறப்போர் இயக்கம் மீது மான நஷ்ட ஈடு வழக்குத் தொடரப்படும்”என்று பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவரது வழக்கறிஞர் எஸ்.சரவணகுமார் அனுப்பியுள்ள நோட்டீஸ் வருமாறு:*

*1991ல் டெக்கான் ஃபன் ஐலேண்டு & ஹோட்டல் லிமிடெட் தன் நிறுவனத்தின் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்களை 1992 ம் ஆண்டு நீதிமன்ற உத்தரவின் (O.S. No.3714 of 1992) மூலம் இது அரசு நிலம் அல்ல தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான இடம் என்று உறுதி செய்தது. அதனை எதிர்த்து 1994ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. (864/1994) அந்த தீர்ப்பினை 23 ஆண்டுகள் வழக்கு நடைபெற்று 2017ம் ஆண்டு அந்த வழக்கில் நிறுவனத்திற்கு சாதகமாக சென்னை உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது.*

*இந்த தீர்ப்பின் அடிப்படையிலும் நீதி மன்ற உத்தரவு படியும் இந்த நிறுவனம் முறையாக செயல்பட்டு வருகிறது. இது தனியார் நிறுவனம் இந்த நிறுவனத்தில் பல்வேறு தரப்பினர் உறுப்பினர்களாக உள்ளனர் மேலும் இந்த நிறுவனம் பல ஆண்டுகளாக அமைச்சர் தரப்பினர் உறுப்பினர்களாக இருந்தனர் என்பதன் காரணமாக அந்த காழ்ப்புணர்ச்சியை காட்டுவதற்காக தற்போது அவதூறான செய்தியை பரப்பி நீதிமன்ற ஆணைகளை மறைத்து புறம் பேசி தவறான தகவலை பகிரங்கமாக தெரிவித்ததற்கு நீதிமன்ற நடவடிக்கை எடுக்க இருக்கின்ற சூழலில் இதனுடைய விவரத்தை கீழ்கண்டவாறு தெரிவிக்கிறோம்*

*இந்த நிறுவனத்தின் சட்ட ஆலோசகர் என்ற முறையில் நிறுவனத்தின் மீது அவதூறு*



*பரப்பிய நபர்கள் மீது எங்கள் நிறுவனத்தின் சார்பாக மான நஷ்ட வழக்கு தொடர்வது மட்டுமின்றி தகுந்த சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*மேலும் செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் சைதாப்பேட்டை தாலுகா சென்னை 600016 செயின்ட் தாமஸ் மௌண்ட், 12 ஜிஎஸ்டி ரோடு, சர்வே எண். 1553, 4 ஏக்கர் 26 சென்ட்ஸ் பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடத்தினை எங்கள் நிறுவனமாகிய டெக்கான் ஃபன் ஐலேண்டு & ஹோட்டல் லிமிடெட் முந்தைய நில உரிமைதாரர்களிடமிருந்து கடந்த 1991ல் வாங்கப்பட்டது. பின்னர் அதன் அடிப்படையில் நில உரிமையை கேனான் குடும்பத்தினர் மேற்படி சொத்தினை கிரையம் வாங்கிய வகையில் மேற்படி நிறுவனம் 35 ஆண்டுகளுக்கு மேலாக கிரைய பத்திரம் சைதாப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டதன் அடிப்படையில் தங்களது உரிமையை நிலைநாட்டியது. பின்னர் மேற்படி நிறுவனமானது (Deccan Fun Islands & Hotel Limited) செயின்ட் தாமஸ் மௌண்ட் கிராமச் சட்ட் விதியின் பிரகாரம் இதனை முதல் தபசில் சேர்க்க வேண்டும் என்றும் பின்னர் அரசு எந்த விதத்திலும் இந்த இடத்தில் நுழையக் கூடாது என்று உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டும் என்று பரிகாரம் கேட்டும் மேலும் பட்டா வேண்டியும் வழக்கு அசல் எண், 3714/1992 தாக்கல் செய்யப்பட்டு 16.10. 1992 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.*

*அந்த தீர்ப்பில் நிறுவனத்திற்கு சாதகமாக 1912ல் ஜேம்ஸ் ஷாட் அவர்களுக்கு இக்னேஷியஸ் என்பவர் விற்பனை செய்திருப்பதாகவும் அன்றிலிருந்து இன்று வரை வேறு யார் பேரில் இருந்திருக்கிறதோ அதற்கு 100 ஆண்டுகளுக்கு மேலாக அரசு வரி கட்டியது மின்றி மற்றும் சர்வே செட்டில்மெண்ட் நகல் மற்றும் தனியார் நிறுவனத்தின் பெயரில் உள்ள வீட்டினை மாற்றுவதற்காக செயிண்ட் தாமஸ் மௌண்ட் கன்டோன்மெண்ட் போர்டிலிருந்து 08.07.1991 ல் கொடுக்கப்பட்ட உத்தரவு அனைத்தையும் கருத்தில் கொண்டு விளம்புகை பரிகாரத்திற்கு ஆவணங்களை ஏற்றுக் கொண்டு மேலே குறிப்பிட்ட சர்வே எண். 1353 மேற்படி தனியார் நிறுவனத்திற்கு பாத்தியப்பட்டது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.*

*அதன் அடிப்படையில் 1994 ஆண்டு அரசால் தொடரப்பட்ட மேல்முறையீடு சென்னை உயர்நீதி மன்றத்தில் 04.09.2017 அன்று 23 ஆண்டுகள் விசாரணைக்குப் பின் தள்ளுபடி செய்யப்பட்டது.*

*இவ்வாறு 100 ஆண்டுகளுக்கு மேலாக விற்பனை பத்திரம் பதியப் பெற்றும் பின்னர் 35 ஆண்டுகளுக்கு மேலாக நிறுவனத்தின் சுவாதீனத்திலும் கிரையப் பத்திரம் மூலமாக வாங்கப்பட்டு வரிவகைகள் செய்தும் மின் இணைப்புகள் மற்றும் நிலவரி ஆவணங்களில் சம்பந்தப்பட்ட அனைத்திலும் உரிமையை நிலைநாட்டி வரும் பட்சத்தில் முறையான வகையில் தனியார் நிறுவனத்தின் பங்கு பரிமாற்றம் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே நடைபெற்றது சட்டப்படி செயல்பாடுகள் செய்யப்பட்டன.*

*இவ்வாறிருக்க தவறான தகவல்களை தெரிவித்து 100 ஆண்டுகளுக்கு மேலாக மேற்படி நிலத்திற்கு (சர்வே எண். 1353) கிரையப்பதிவுகள ஏற்பட்டு, பின்னர் 35 ஆண்டுகளுக்கு முன்பாக கிரையம் பெற்ற ஒரு தனிப்பட்ட சொத்தின் மீது வேண்டுமென்றே தவறான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று இதன் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.*

*மேலும் 2015ம் ஆண்டு போடப்பட்ட ஆணை எதுவும் அதற்கு முந்தைய கிரையப் பத்திரத்தை கட்டுப்படுத்தாது. அந்த ஆணை 1912 ல் நடைபெற்ற கிரையப் பத்திரத்தை கட்டுப்படுத்தாது. எந்த ஆணையும் பேரில் பிறப்பித்த பின்பு நடைபெறும் பதிவுகளுக்கு பொருந்தும். பின் நோக்கிச் செல்லாது. எனவே இவ்வாறு தவறான தகவல்களை தெரிவித்து என்னுடைய நிறுவனத்தின் மீது அவதூறு பரப்பிய நபர்கள் மீது எங்கள் நிறுவனத்தின் சார்பாக மானநஷ்ட வழக்கு தொடர்வது மட்டுமின்றி தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அந்த நோட்டீசில் கூறப்பட்டுள்ளது.*

---


தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

**பெரம்பலூர் மாவட்டம்**

**பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்**

**தேர்தல் முடிவு**

**தலைமைக் கழக அறிவிப்பு!**

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ந.ஜெகதீஸ்வரன் அவர்கள் வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நிய மிக்கப்பட்ட காரணத்தால்; பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 23 (புதன்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு ஆர்.முருகேசன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக,**

**திரு. ஆர். முருகேசன்,** 1/56, வடக்கு தெரு, கைகளத்தூர் அஞ்சல், வேப்பந்தட்டை தாலுக்கா, பெரம்பலூர் மாவட்டம் - 621117. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.


---

# அவலூர்பேட்டையில் கலைத்திருவிழா போட்டிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார்

*செஞ்சி, அக்.25-*

*விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் கல்வி மாவட்டம் சார்பில் மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில்கலைத் திருவிழா நிகழ்ச்சி நடைபெற்றது.*

*நிகழ்ச்சிக்கு வட்டார கல்வி அலுவலர்கள்வெங்கடேசன், பிரகாஷ்,அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வள மையய மேற்பார்வையாளர் ஜமுனா அனைவரையும் வரவேற்றார்.*

*நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு என்ற தலைப்பில்நடைபெற்ற கலைத் திருவிழா நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.*

*மேல்மலையனூர் ஒன்றியத்தைச் சேர்ந்த 36தொடக்க பள்ளிமற்றும் நடுநிலைப் பள்ளி,அரசு உதவி பெறும் பள்ளிகளிலிருந்துசுமார் 150க்கும் மேற்பட்ட பள்ளிமாணவ மாணவிகள் கலைத் திருவிழாவில் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். 24 ஆம் தேதி 9, 10 வகுப்பு மாணவர்களுக்கும் ,25ஆம் தேதி 11, 12 வகுப்பு மாணவர்களுக்கும் கலைத் திருவிழா போட்டிகள் நடைபெறுகிறது.*

*இப் போட்டியில் வெற்றி பெறும் மாணவ மாணவிகள் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்க உள்ளனர்.*

*நிகழ்ச்சியில்மாவட்ட கவுன்சிலர்கள் சாந்தி சுப்பிரமணியன், செல்வி ராமசரவணன், ஒன்றிய கவுன்சிலர்கள் ஷாகின் அர்ஷத், ரவிச்சந்திரன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சரோஜா அய்யப்பன், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் அரிமாபாஸ்கர், முரளி,எஸ்.பி. மணியரசன், பள்ளி மேலாண்மை குழு தலைவர்ராஜகுமாரி விவேகானந்தன், துணைத் தலைவர் விநாயகமூர்த்தி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் ராம சரவணன், ஒன்றிய துணை செயலாளர் குராமன்,எஸ்.பி. சம்பத், ஐ.டி.மணி வண்ணன், அப்துல் வகாப், அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

*வட்டார வளமைய்ய பயிற்றுநர் ஆசிரியர் ராதா கிருஷ்ணன் நன்றி கூறினார்.*



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (23.10.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் தமிழ் வளர்ச்சித் துறையில் 2024–25 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய அறிவிப்புகள் மற்றும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.